**In the Court of Judicial Magistrate No.I, Kovilpatti.**

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, CrPC)

| | | |
|---|---|---|
| Case No. | : | CC No.45/2024 |
| Deposition of witness for Prosecution | : | P.W– 8 |
| Name | : | மாரியப்பன், வயது 57 |
| Father Name/Husband Name | : | வெள்ளைசாமி |
| Village | : | கடம்பூர் |
| Taluk | : | கயத்தார் |
| Calling | : | உதவி ஆய்வாளர் |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 08th day of June 2026.

**(Accused present).**

**முதல் விசாரணை**

1 நான் தற்போது கடம்பூர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் உள்ளேன். நான் இதற்கு முன்பு கழுகுமலை காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்த போது 21.05.2023 ஆம் தேதி மாலை 17.30 மணிக்கு கழுகுமலை தலைமை காவலர் அருண் ராஜ் என்பவர் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை குற்ற எண்.84/2023 இ.த.ச. பிரிவுகள் 279, 337 Act ஆக வழக்கு பதிவு செய்தார்.

2 அசல் புகார்மனு மற்றும் முதல் தகவல் அறிக்கையை கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பியும் மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பியும் விசாரணை நகலை எனது பார்வைக்கும் வைத்தார். நான் இவ்வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்டு சம்பவ இடம் சென்று சாட்சிகள் கருப்பசாமி மற்றும் சந்திரமோகன் ஆகியோர்கள் முன்னிலையில் அன்றைய தினம் 18.00 மணிக்கு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைப்படம் தயார் செய்தேன். **(அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.5 மற்றும் மாதிரி வரைப்படம் அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

3 பின்னர் சாட்சிகள் சந்தோஷ் குமார், மகாலட்சுமி, பூமணி, கருப்பசாமி, சந்திரமோகன், த.கா. அருண்ராஜ் ஆகியோர்களை தனிதனியாக

விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் இவ்வழக்கில் காயம்பட்ட பெரியசாமி என்பவர் திருநெல்வேலி அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தவர் சிகிச்சை பலனின்றி 21.05.2023 ஆம் தேதி இரவு 20.20 மணிக்கு இறந்துவிட்டதாக கிடைத்த இறப்பு தகவலின்படி இவ்வழக்கின் சட்டபிரிவுகளை இ.த.ச. பிரிவுகள் 279, 304A Act ஆக சட்டபிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்தேன். **(அந்த சட்டபிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

4 மேலும் வழக்கின் கோப்புகளை நிலைய ஆய்வாளர் அவர்களின் பார்வைக்கு விசாரணைக்காக வைத்தேன். மேற்படி ஆய்வாளர் அவர்கள் ஸ்டர்லைட் பாதுகாப்பு பணியில் இருந்ததால் அவர்களின் உத்தரவின்படி இவ்வழக்கை மீண்டும் நான் விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன். கடந்த 22.05.2023 ஆம் தேதி காலை 10.45 மணிக்கு திருநெல்வேலி மருத்துவ கல்லூரி சென்று இறந்து போன பெரியசாமியின் பிரேதத்தின் மீது பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் பிரேத விசாரணை மேற்கொண்டேன். **(அந்த பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** பிரேத விசாரணையின் போது சந்தோஷ் குமார் மற்றும் மகாலாட்சுமி ஆகியோர்களை மறு வாக்குமூலம் பதிவு செய்தேன். சங்கீத பிரியதர்ஷினி, பூமணி, காவலர் ஜெயசங்கர் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பிரேதத்தை பிரேத பரிசோதனை முடித்து உறவினர் வசம் ஒப்படைத்தேன். இவ்வழக்கின் கோப்புகளை மேல் விசாரணைக்காக ஆய்வாளர் விஜயகுமார் பார்வைக்கு வைத்தேன்.

<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>

5 காயம்பட்ட பெரிய சாமியை சம்பவ இடத்தில் இருந்து கார் மூலமாக மருத்துவமனைக்கு அழைத்து செல்லப்பட்டதாக சாட்சிகள் சொல்லியுள்ளார்கள் என்றால் சரிதான். அ.சா.1 எனது விசாரணையில் அவரது தந்தையை ஆம்புலன்ஸ் மூலமாக மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றதாக எனது விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். அ.சா.1 எனது விசாரணையில் எதிரி குடிபோதையில் இருந்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்தில் எரியகூடிய மின்விளக்குகள் கிடையாது என்றால் சம்பவ இடத்திலிருந்து 25 மீ தொலைவில் மின்விளக்குகள் உண்டு.

6 சம்பவ நேரம் இருட்டான நேரம் என்றால் சரிதான். அ.சா.3 எனது விசாரணையில் எதிரி தவறான திசையில் வந்து இறந்துபோன பெரியசாமியின் மீது மோதியதாக எனது விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான், ஆனால் எதிரி எதிரே வந்து

மோதியதாக சொன்னார். சம்பவ இடம் என்பது பார்வை மகஜரிலும், வரைப்படத்திலும் ரோட்டிற்கு மேல்புறத்தில் உள்ளது என்றால் சரிதான். பட்டியல் சாட்சி 10 அவரது வாக்குமூலத்திலும், முதல் தகவல் அறிக்கையிலும் 20.05.2023 அன்று மதியம் 01.00 மணிக்கு திருநெல்வேலி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையிலிருந்து காயத்தகவல் கிடைத்ததாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான், தேதியை தவறுதலாக சொல்லியுள்ளார். அந்த காயத்தகவலை பார்வையிட்டால் சம்பவ நேரம், தேதி, காயத்தின் வகை புலனாகும் என்றால் சரிதான்.

7 அந்த காயத்தகவல் நீதிமன்றத்திற்கு அனுப்படவில்லை என்றால் சரிதான், முதல் தகவல் அறிக்கையில் காயத்தகவலும் இணைத்து அனுப்பினதாக குறிப்பிடபட்டுள்ளது. எனது விசாரணையில் மேற்படி பெரியசாமி எப்போது கழுகுமலை அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திலிருந்து விடுவிக்கப்பட்டதாக துலங்காது என்றால் நேரம் குறிப்பிடவில்லை ஆனால் உடனடியாக விடுவிக்கப்பட்டு மேல் சிகிச்சைக்காக திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு அனுப்பட்டார். மேற்படி பெரியசாமி எத்தனை மணிக்கு திருநெல்வேலி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்க்கப்பட்டார் என்று எனது விசாரணையில் துலங்காது என்றால் அன்றைய தினம் இரவு 11.00 மணிக்கு சேர்க்கப்பட்டார்.

8 காயம்பட்ட பெரியசாமி கோவில்பட்டி சசி மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்து செல்லப்பட்டதாக சாட்சிகள் எனது விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். காயம்பட்ட பெரியசாமிக்கு உடனடியாக மருத்துவ சிகிச்சை வழங்கபட்டிருந்தால் அவர் உயிர் பிழைத்திருப்பார் என்றால் சரியல்ல. அந்த விவரம் தெரிந்து விடகூடாது என்பதற்காகதான் காயத்தகவல் கழுகுமலை அரசு ஆரம்ப சுகாதார நிலைய விபத்து பதிவேடு, கோவில்பட்டி சசி மருத்துவமனை AR ஆகியவை இந்த வழக்கில் மறைக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, ஆரம்ப சுகாதார நிலையத்தில் AR பதியமாட்டார்கள். திருநெல்வேலி அரசு மருத்துவமனையில் AR பதிவார்கள், அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அந்த AR யை பார்வையிட்டால் மருத்துவ கவனக்குறைவு தெரிய வரும் என்பதால் அது இந்த வழக்கில் மறைக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

9 காயம்பட்ட பெரியசாமி அவரது இதயநோய் காரணமாகவும், இரத்த அழுத்தம் காரணமாகவும், கழுகுமலை – சிவகாசி ரோட்டில் கிழக்கு பக்கம் தானாக தவறி விழுந்ததால் தலையின் பின்பக்கம் காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான் சொன்னது போல் சொன்ன நேரத்தில் சாட்சிகளை தாக்கல் செய்து ஆவணங்கள் தயார்

செய்யவில்லை என்றால் சரியல்ல. சம்பவத்திற்கு மறுநாள் அ.சா.1 காவல் நிலையத்தில் புகார் கொடுத்தது இவ்வழக்கிற்கு விரோதமாக இருக்கும் என்பதால் அதை மறைத்து விட்டு திருநெல்வேலி அரசு மருத்துவமனையில் புதிதாக புகார் பெறப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனது விசாரணை ஒரு தலைபட்சமானது என்றால் சரியல்ல. சம்பவத்தன்று பெரியசாமிக்கு வாகன விபத்தில் காயம் எதுவும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

Taken before me in open court in the presence of accused and read over to the witness and acknowledged by him/her to be Correct.

Sd/ Tr. K. Anand, B.A, M.L.,
Judicial Magistrate No.1,
Kovilpatti.